



# தமிழ்நாடு அரசு
## மாவட்ட நகர் ஊரைமப்பு அலுவலகம்
## கன்னியாகுமரி மாவட்டம்

D.T.C.P

கன்னியாகுமரி மாவட்டம், விளவங்கோடு வட்டம், மேல்புறம் ஊராட்சி ஒன்றியம், தேவிகோடு ஊராட்சி, தேவிகோடு கிராமம், சர்வே எண் - 231/2C1-ல் அமையும் குடியிருப்பு மனைப்பிரிவின் தொழில் நுட்ப ஒப்புதல் வரைபடம்.(திட்டமில்லாத பகுதி)

அளவு:1:400

வ

இணையதள விண்ணப்ப எண் 99UW2EKL/2025

மனைப்பிரிவு இடத்தின் மொத்த பரப்பு : 7777.0ச.மீ (1.922ஏக்கர்)

உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு : 2470.50 ச.மீ

மனைகளின் பரப்பு : 5306.5 ச.மீ

கோரிய மனைகள் - 34

ஒதுக்கிய மனைகள் - 34

மனைப்பிரிவு இடத்தின் எல்லை

நிலையிலுள்ள சாலை

உத்தேச மனைப்பிரிவு சாலை

பொது ஒதுக்கீடுகள்:(உள்ளாட்சிக்கு ஒப்படைப்பு செய்யப்பட வேண்டியவை)

உத்தேச மனைப்பிரிவு சாலை மற்றும் மூலை முடக்கு = 2470.50ச.மீ

அரசாணை எண்: 18 ந.நி(ம)கு.வ(ந.ப.1)துறை நாள்:04.02.2019, விதி-47(6)-ன்படியும் மற்றும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்: 4367/2019-பிஏ-2, நாள்:05.02.2020 CASE-V -ன் படி

பூங்கா பரப்பளவு -530.650 ச.மீ.

மேற்கண்ட பூங்கா ஒதுக்கீடு பரப்பிற்கு அரசு வழிகாட்டி மதிப்பீட்டின்படி மனுதாரரால் ரூ.-11,43,550- SBI வங்கி மூலம் அரசு கணக்கில் நாள்: 27/03/2025 செலுத்தப்பட்டுள்ளது.

## பொது உபயோகம்:

A. உள்ளாட்சி உபயோகத்திற்கு = 66.85ச.மீ. ( 1.259 %)

B.தமிழ்நாடு மின்உற்பத்தி (ம) மின்பகிர்மான கழக உபயோகத்திற்கு = 72.25ச.மீ. ( 1.361%) (TANGEDCO)

தானப்பத்திரம் எண்கள்: 537/2025, நாள்: 07/03/2025, 538/2025 நாள்: 07/03/2025 (பளுகல் சார்பதிவாளர் அலுவலகம்)

மூலை முடக்கு - 12.0மீ அகலம் வரை உள்ள சாலைகளுக்கு - 1.50மீ x 1.50மீ

## நிபந்தனைகள்

1. அரசாணை எண: 18 ந.நி.(ம)கு.வ.(ந.ப.1)துறை நாள்:04.02.2019, அரசாணை எண்:16 ந.நி.(ம)கு.வ (ந.ப.1) நாள்:31.01.2020-ன்படியும் நகர் ஊரமைப்பு இயக்குநர், சென்னை அவர்களது சுற்றறிக்கை ந.க.எண்:4367/2019பிஏ2, நாள்.05.02.2020 மற்றும் அரசாணை எண்: 181 வீட்டு வசதி மற்றும் நகர்ப்புற வளர்ச்சித்துறை நாள்:09.12.2020-ன்படி உத்தேச மனைப்பிரிவில் அமையும் மனைப்பிரிவு சாலைகள், மூலைமுடக்குகள், பொது உபயோகத்தினை உள்ளாட்சிக்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது மற்றும் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உபயோக ஒதுக்கீட்டினை மின்சார வாரியத்திற்கு தானமாக ஒப்படைக்கப்பட்டுள்ளது. மேலும் மேற்காணும் அரசாணைகளின்படி உத்தேச சாலைகளை நிர்வாக அதிகாரிகளால் நிர்ணயிக்கப்படும் மட்டத்திற்கும், அகலத்திற்கும் தார்ச்சாலையாகவும் தேவையான அடிப்படை வசதிகளை இடத்தில் மனைப்பிரிவு உரிமையாளரால் அமைக்கப்பட்ட பின் அதனை உள்ளாட்சியால் உறுதி செய்து கொண்டு மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் உள்ளாட்சியால் வழங்கப்பட வேண்டும்.
2. இம்மனைப்பிரிவிற்கு இறுதி ஒப்புதல் அளிக்கும் முன், இடத்தில் எந்த துறையாலும் நில ஆர்ஜித நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்றும் எந்த துறைக்காகவும் நில ஆர்ஜிதப்பட்டியல் மாவட்ட வருவாய் அலுவலருக்கு அனுப்பப்படவில்லை என்றும் உள்ளாட்சி உறுதி செய்து கொள்ள வேண்டும்.
3. இம்மனைப்பிரிவு ஒப்புதலுக்காக சமர்ப்பிக்கப்பட்ட ஆவணங்கள் (ம) சான்றுகள் சரியானவையல்ல என அறியப்பட்டால் அல்லது இம்மனைப்பிரிவிற்கு தொழில்நுட்ப ஒப்புதல் வழங்கியதால் பாதிப்பு ஏற்பட கூடிய சூழ்நிலை ஏற்படின் இம்மனைப்பிரிவிற்கு வழங்கப்பட்ட தொழில்நுட்ப ஒப்புதலானது எவ்வித முன்னறிவிப்பின்றி இத்துறையால் ரத்து செய்யப்படும்.
4. விற்பனைக்குண்டான மனைகளை விற்பனை செய்யும்போது இவ்வாணையின் நகலோடு நகர் ஊரமைப்பு துறையில் ஒப்புதலளிக்கப்பட்ட வரைபட நகல் மனை வாங்குபவர்களுக்கு கட்டாயம் வழங்கப்பட வேண்டும்.
5. ஒப்புதலளிக்கப்பட்ட மனைப்பிரிவு வரைபடத்தை எந்தவித மாற்றம் விடுதலின்றி மனைப்பிரிவு நுழைவாயிலில் அளவிலான நிரந்தர தகவல் பலகை மூலம் பொதுமக்கள் பார்வைக்கு நிரந்தரமாக பிரசுரிக்கப்பட வேண்டும்.
6. The Tamil nadu Government in G.O.Ms.No.112, Housing and Urban Development Department dated: 22.06.2017 have approved the tamil Nadu Real Estate (Regulation & Development) Act 2016. The promoter has to advertise, market, book, sell or offer for sale, or invite persons to purchase in any manner any plot, apartment or building, as the case may be, in any Real Estate Project or part of it only after registering the Real Estate Project with the Real Estate Authority.

குறிப்பு

அனைத்து அளவுகளும் மீட்டரில் குறிப்பிடப்பட்டுள்ளது

SWP/ ம.வ/ககுமாநஊஅ எண்:18/2025

இணைஇயக்குநர்/உதவி இயக்குநர் (மு.கூ.பொ)
மாவட்ட நகர் ஊரமைப்பு அலுவலகம்
கன்னியாகுமரி மாவட்டம்

ளர் வரைவாளர் நிலைய மேற்பார்வையாளர்

Signature Not Verified
Signed by: Assistant Director
Location:Kanniyakumari
Date:2025.04.07 17:3[illegible].12